# In the Court of the District Munsif, Eraniel

Original Suit No. 35/2020 Date:29.11.2024

(P.W.2)- முருகன்

**குறுக்கு விசாரணை**

1. வழக்கின் பி-பட்டிகை சொத்து எந்த ஆவணத்தின் மூலம் எந்த ஆண்டிலிருந்து என் அனுபவத்தில் உள்ளது என்றால் நினைவில்லை. பிரதிவாதியின் சொத்து வழக்கு சி-பட்டிகை சொத்தின் எந்த பக்கம் உள்ளது என்றால் என் சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. என் சொத்திற்கு மேற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் நினைவில்லை. என் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள கண்டத்தை தாண்டினால் ரோடு வந்துவிடும் என்றால் இல்லை. என் சொத்திற்கு மேற்கு பக்கம் எங்கையாவது ரோடு உள்ளதா என்றால் பெரியபள்ளி என்ற ஊர் உள்ளது. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்தபோது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அரசு சர்வேயர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. தனியார் சர்வேயர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

2. வீரபத்திரன் என்ற ஓய்வுபெற்ற சர்வேயர் எனக்கு உறவுமுறை என்றால் என்னுயைட சமுதாயத்தை சார்ந்தவராவார். மேற்சொன்ன வீரபத்திரன் ஆய்வுமேற்கொள்ள வந்தபோது ஆணையருடன் வந்தாரா என்றால் வந்தார். வழக்கு டி-பட்டிகை சொத்தில் வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு உள்ளது என்றால் சரிதான். பி-பட்டிகை சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 7 செண்ட் ஆகும். பி-பட்டிகை சொத்தில் என்னஉ ள்ளது என்றால் ஓரத்தில் தென்னை மரம் உள்ளது

(P.W.2)- முருகன்

மற்றபடி காலிமனையாகதான் உள்ளது. நான் நீதிமன்றத்தில் என் மனைவியுடன் தாக்கல் செய்த எந்த ஆவணத்திலும் டி-பட்டிகை சொத்தின் பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. பி-பட்டிகை சொத்து எந்த ஆவணம் மூலம் எந்த ஆண்டு கிடைத்தது என்றால் நினைவில்லை. என் சொத்திற்கு மேற்கு பக்கமாக 2 கண்டங்கள் (தோட்டம்) தாண்டி ரோடு உள்ளது என்றால் இல்லை. நான் கடைசியாக பி-பட்டிகை சொத்திற்கு எப்போது சென்றேன் என்றால் 2 வாரத்திற்கு முன்பு சென்றேன். பிரதிவாதிக்கு சொந்தமான சி-பட்டிகை சொத்தில் நான் சொல்வதுபோல் எந்த பாதையும் இல்லை என்றாலும் டி-பட்டிகை சொத்து என்று ஒன்று இல்லை என்றால் சரியல்ல.

3. நான் சொல்வதுபோல் உண்மையாகவே டி-பட்டிகை சொத்தில் பாதை இருந்தது என்றால் முன் ஆவணங்கள் அனைத்திலும் குறிப்பிடப்பட்டிற்கும். ஆனால் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். டி-பட்டிகை சொத்து புறம்போக்கு நிலமாகும். என்னுடைய இடமான பி-பட்டிகை சொத்திலும் புறம்போக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அது எவ்வளவு விஸ்தீரணம் என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் டி-பட்டிகை சொத்து புறம்போக்கு நிலம் என்பதால் அரசாங்கத்தை கட்சியாக சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. என் கூற்றுபடி அரசாங்கத்தை கட்சியாக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. என் கூற்றுபடி அரசு சர்வேயர் மூலமாக வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் அளந்து திட்டப்படுத்தினால்

மட்டுமே இவ்வழக்கில் நியாயமான முடிவு எடுக்கப்பட முடியும் என்றால் எனக்கு சொத்தை அளப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. நீதிமன்ற ஆணையரும், வீரபத்திரன் என்ற சர்வேயரும் சேர்ந்து இல்லாத பாதையை இருப்பதாக சொல்லி நீதிமன்றத்தை தவறாக வழிகாட்டும் எண்ணத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல.

4. முக்கியமாக கேள்விகளுக்கு நினைவில்லை என்று சொல்வதால் என்னுடைய சாட்சியம் நம்பதகுந்ததல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியை கஷ்டபடுத்தவேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)